பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 23 சனிக்கிழமை 07.01.2023 கதிர் 313

## ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை:
## பிரத்தியேக வகுப்புகளுக்கு ஜனவரி 17 தொடக்கம் தடை




2013 ஜூன் 21ஆம் திகதி வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய, 8

# ஆணைக்குழுவை மிரட்டி தேர்தலை ஒத்திவைக்க ரணில் அரசு முயற்சி!



### சஜித் பகிரங்கக் குற்றச்சாட்டு

தேர்தல்கள் ஆணைக்குழுவை மிரட்டி உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்க ரணில் அரசு முயற்சிக்கின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டினார்.

அரசின் இந்த மிரட்டலுக்குத் தேர்தல்கள் ஆணைக் குழு அடிபணிந்து போகக்கூடாது என்றும் அவர் வலியுறுத்தினார். 2

## கோட்டாவின் தான்தோன்றித்தனமே அவர் விரட்டப்பட்டமைக்குக் காரணம்

### முன்னாள் சகா விமல் சுட்டிக்காட்டு



கோட்டாபய ராஜபக்ஷவின் தண்ணிச்சையான முடிவுகளும், அவரின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளுமே அவர் ஜனாதிபதி பதவியிலிருந்து விரட்டப்பட்டமைக்குப் பிரதான காரணம்.

–இவ்வாறு முன்னாள் 2

## வங்குரோத்து நிலையால் அதிகரித்துள்ளது வறுமை

### எதிர்க்கட்சித் தலைவர் கவலை

நாட்டில் நிலவும் வங்குரோத்து நிலைமையால் வறுமை அதிகரித்துள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

'பிரபஞ்சம்' வேலைத்திட்டத்தின் கீழ் 63 ஆவது கட்டமாக 50 இலட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை பஸ் ஒன்று கோட்டை, ஆனந்த மகளிர் கல்லூரிக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் அன்பளிப்புச் செய்யப்பட்டது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 2

### மூன்று மாதங்களுக்கு முன் காணாமல்போன

## 15 வயது சிறுமியைக் கண்டுபிடிக்க மக்களின் உதவியை நாடும் பொலிஸ்



2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் 13 ஆம் திகதி முதல் காணாமல்போன கெங்கல்லை, அம்ப கோட்டே பகுதியைச் சேர்ந்த 15 வயதுடைய பாடசாலை மாணவியைக் கண்டுபிடிக்கப் பொலிஸார், பொதுமக்களின் உதவியை 2

## தேர்தல் நடந்தால் 'மொட்டு'க்கே வெற்றி

### நாமல் அதீத நம்பிக்கை



உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடந்தால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவே வெற்றிவாகை சூடும் என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்கொள்ளும் தயார்ப்படுத்தலில் மொட்டுக் கட்சி ஈடுபட்டுள்ளது. வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கை இடம்பெறுகின்றது.

மொட்டுக் கட்சியுடன் கூட்டிணைந்து 2

## அடுத்த வாரம் ரணில் இந்தியாவுக்கு விஜயம்



இந்தியாவால் நடத்தப்படும் உலகளாவிய தெற்கு உச்சிமாநாட்டில் பங்கேற்கும் நோக்கில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த வாரம் இந்தியாவுக்குச் செல்லவுள்ளார்.

ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் அவர் 2

## முன்னிலை சோலிசக் கட்சியினரும் முதன்முறையாகக் களமிறங்க முடிவு



உள்ளூராட்சி சபைத் தேர்தலில் குமார் குணரத்னம் தலைமையிலான முன்னிலை சோலிசக் கட்சியும் களமிறங்கவுள்ளது. 22 தேர்தல் மாவட்டங்களிலும் அக்கட்சி போட்டியிடவுள்ளது.

முன்னிலை சோலிசக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அக் கட்சி உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் 2

## தமிழ்க் கூட்டமைப்பின் முன்மொழிவுகள் அடுத்த பேச்சில் சாதகமாகப் பரிசீலனை

### அதிருப்தி நிலையை ஏற்க முடியாது என்கிறார் பிரதமர்



இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ள முன்மொழிவுகள் அடுத்த சர்வகட்சிக் கூட்டத்தில் சாதகமாகப் பரிசீலிக்கப்படும். சர்வ கட்சிப் பேச்சு சரியான திசையை நோக்கியே சென்று கொண்டிருக்கின்றது.

– இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் தொடர்பில் இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அதிருப்தியை வெளியிட்டுள்ளமை தொடர்பில் ஊடகங்களிடம் பிரதமர் கருத்துரைக்கும் போதே இவ்வாறு கூறினார். 2

## வங்குரோந்து ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பெற்றோர்களால் தமது பிள்ளைகளுக்குத் தேவையான புத்தகங்களைக் கூட வாங்கிக் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அவர்கள் தமது நாளாந்த உணவுத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மூவேளை சாப்பிட்டவர்கள் தற்போது இரு வேளையும், இரு வேளை சாப்பிட்டவர்கள் தற்போது ஒரு வேளையும் சாப்பிடும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் நாடாக எம்மால் முன்னோக்கிச் செல்ல முடியாது. நாட்டில் திருப்புமுனை ஒன்று தேவை. அது கல்வித்துறையில் ஏற்படும் மறுசீரமைப்புசார்ந்த திருப்புமுனையாக இருக்க வேண்டும்.

தற்போது நடைமுறையிலுள்ள கல்விக்கொள்கையை மாற்றியமைக்க வேண்டும். இதனூடாக நாட்டை முதல் நிலைக்குக் கொண்டுவரும் வேலைத் திட்டம் உடனே ஆரம்பிக்கப்பட வேண்டும் - என்றார்.

## தேர்தல் நடந்தால் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போட்டியிடும் கட்சிகள் தொடர்பான பேச்சுகளும் இறுதிக்கட்டத்தில் உள்ளன.

தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்த திகதிக்குள் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்வோம்.

நீதிமன்றத்தின் தடை உத்தரவு எதுவும் இன்றி உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடந்தால் மொட்டுக் கட்சியே வெற்றியடையும் - என்றார்.

## கோட்டாவின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ச எம்.பி. தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

கோட்டாபய, மக்கள் வழங்கிய ஆணைக்குச் சிறிதளவும் மதிப்புக் கொடுக்காமல் தான்தோன்றித்தனமாகவே செயற்பட்டார்.

அவரின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளை நான் தட்டிக் கேட்டபடியால் எனது அமைச்சுப் பதவியும் பறிபோனது.

கோட்டாபயவின் இப்படியான செயற்பாடுகள் இறுதியில் ராஜபக்ஷ குடும்பத்துக்கே தலைக்குனிவை ஏற்படுத்தியது மட்டுமன்றி ஒட்டுமொத்த ராஜபக்சக்களும் பதவிகளிலிருந்து விரட்டப்பட்டார்கள்.

ராஜபக்ஷக்களின் கட்சியுடன் நாம் இனிமேல் கூட்டணி அமைக்கவே மாட்டோம் - என்றார்.

## 15 வயது ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடியுள்ளனர். 15 வயதுடைய சிறுமி பாடசாலை முடிந்து வீடு திரும்பவில்லை எனச் சிறுமியின் உறவினர்கள் தெல்தெனிய பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறுமி பாடசாலையை முடித்து விட்டு பாடசாலையைச் சேர்ந்த மற்றுமொரு சிறுமியுடன் ரயிலில் கொழும்பு நோக்கிப் பயணித்துள்ளார் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

மற்றைய சிறுமியை ரயிலில் இருந்த இளைஞர் ஒருவரே பெற்றோரிடம் ஒப்படைத்த வேளை இந்தச் சிறுமி காணாமல்போன விடயம் தெரியவந்தது.

இந்தச் சிறுமியைக் கண்டால் கீழ் வரும் தொலைபேசி இலக்கங்கள் மூலம் தெரியப்படுத்துமாறு பொதுமக்களிடம் பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

⏩ தெல்தெனிய பொலிஸ் - 081-2374073

⏩ தெல்தெனிய ஓ.ஐ.சி. - 071-8591066

## முன்னிலை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலர் முன்னிலை சோலிசக் கட்சியின் சார்பில் போட்டியிடுவதற்குத் திட்டமிட்டுள்ளனர்.

ராஜபக்ச ஆட்சிக்கு எதிராக இடம்பெற்ற மக்கள் போராட்டத்தில் பங்கேற்ற தரப்புகளில் முன்னிலை சோலிசக் கட்சி பிரதான இடத்தை வகித்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆணைக்குழுவை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலை நடத்தும் முழு அதிகாரமும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உண்டு என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் நீதிமன்றமும் சிறந்த தீர்ப்பை வழங்கும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் நம்பிக்கை வெளியிட்டார்.

தோல்விப் பயத்தாலேயே தேர்தலை ஒத்திவைக்க அரசு முயற்சிக்கின்றது என்றும் அவர் மேலும் கூறினார்.

## அடுத்தவாரம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவுக்கு மேற்கொள்ளும் முதல் பயணமாக இது அமைகின்றது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் ஜனவரி 12 மற்றும் ஜனவரி 13 ஆகிய திகதிகளில் இந்த உச்சி மாநாடு நடைபெறுகின்றது.

இந்த மாநாட்டில் 20 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

நான்கு அமர்வுகள் ஜனவரி 12ஆம் திகதியும், ஆறு அமர்வுகள் ஜனவரி 13ஆம் திகதியும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ்க் கூட்டமைப்பின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வகட்சிக் கூட்டம் கடந்த மாதம் நடைபெற்றது. அந்த முதலாவது அமர்வில் தமிழ் மக்களுக்குத் தீர்வொன்றை வழங்க வேண்டும் என்பதில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் உடன்பட்டுள்ளனர். இதன் தொடர்ச்சியாக அடுத்த சர்வகட்சிப் பேச்சு எதிர்வரும் 10, 11, 12ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன.

இந்த இரண்டாம்கட்டப் பேச்சுக்கு முன்னர் ஒரு முன்னேற்பாடாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் ஜனாதிபதி பேச்சு நடத்தியுள்ளார். உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் தொடர்பிலும் இதர விடயங்கள் தொடர்பிலும் அவர்களிடம் முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளன.

இந்த முன்மொழிவுகளுக்கு அமைய அடுத்த சர்வகட்சிக் கூட்டத்தில் கலந்துரையாடல்கள் இடம்பெறும். அதன்போது கூட்டமைப்பினரின் முன்மொழிவுகள் சாதகமாகப் பரிசீலிக்கப்படும். ஆதலால், கூட்டமைப்பினரின் தற்போதைய அதிருப்தி நிலையை ஏற்க முடியாது. ஏனெனில், சர்வகட்சிக் கூட்டமானது அதன் சரியான திசையை நோக்கியே சென்றுகொண்டிருக்கின்றது - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## எதிர்ப்பைத் தீவிரமாக்குவோம்!

கொரோனாப் பீதி – மனப்பிராந்தி – முழு உலகையும் மீண்டும் ஆட்டிப் படைக்கத் தொடங்கியுள்ளது.

சீனாவிலும், பிற இடங்களிலும், ஏற்பட்டுள்ள தொற்று மற்றும் இழப்புகள் பற்றிய செய்திகள் உலகெங்கும் அச்சத்தை ஏற்படுத்தி வருகின்றன என்பது உண்மைதான்.

எனினும், கொரோனா விடயத்தில் சில யதார்த்தங்களை நாம் ஒப்புக்கொண்டேயாக வேண்டும்.

2019 இறுதியில் முதன் முதலில் கொரோனா சீனாவில் இருந்து பரவத் தொடங்கியமை போன்ற நிலைமையில் உலகம் இன்று இல்லை. இப்போது தொற்றுப் பற்றிய மூன்று ஆண்டுகள் பட்டறிவு மற்றும் எதிர்வினை நடவடிக்கைகள் பற்றிய அனுபவத்துடன் உலகம் உள்ளது.

இந்த வைரஸின் தொற்றின் ஆரம்ப காலத்தில் அதை எதிர்கொள்ள வழி தெரியாமல் நாடுகள் முடக்கத்தை அறிவித்தமை போல, இனியும் முடக்கங்களை அறிவிப்பது பிரதான நடவடிக்கையாக இருக்கப் போவதில்லை என்பதும் தெளிவு.

பேரழிவு ஏற்படுத்தும் இந்த வைரஸ் நாளொரு வண்ணமும், பொழுதொரு மேனியுமாக புதிய புதிய திரிவு மற்றும் விகார வடிவங்களை எடுத்துக் கொண்டு ஆட்டம் போட்டாலும், அதை முகம் கொண்டு தாண்டும் தைரியத்தில்தான் மனித குலம் எழுந்து நிற்கின்றது என்பது கண்கூடு.

கொரோனா வைரஸுக்காக உலகத்தை – தேசத்தை – பிராந்தியங்களை – ஊர்களை – குறிச்சிகளை – முடக்க முடியாது. யதார்த்தத்தில் அந்த வைரஸையும் அதன் திரிவுகளையும் எதிர்கொண்டேயாகவேண்டும்என்பதே இன்றைய நடைமுறைப் புறநிலைமை.

அதுதான் நிலைமை என்றால், உலகின் எங்கெங்கோ மூலைகளில் உருவாகும் புதிய புதிய கொரோனா திரிவுகள் பூமிக் கிராமம் எங்கும் விரைந்து பரவுவது தடுக்க முடியாத கட்டாயம்தான். அவற்றை மனிதகுலம் எதிர்கொண்டேயாக வேண்டும் என்பதும் தவிர்க்கவே இயலாத யதார்த்தமே.

இப்போது அமெரிக்காவில் பரவி வரும் திரிவும், சீனாவில் பரவுவதாக கூறப்படும் திரிவும் இப்போதோ அல்லது தாமதமாகவோ இலங்கைக்குள் வருவதும் பரவுவதும் தவிர்க்க முடியாத யதார்த்தங்கள்தான் என்று இலங்கை மருத்துவ, சுகாதார அதிகாரிகள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

கொரோனா வைரஸுக்கும் அதன் திரிவுகளுக்கும் ஈடு கொடுக்க கூடிய மனித எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்துவதே இந்த நெருக்கடியை எதிர்கொள்வதற்கான ஒரே மார்க்கமாகும்.

சரியோ, பிழையோ இலங்கை மக்கள் மத்தியில் அந்த எதிர்ப்புச் சக்தியை வலுப்படுத்தும் விதத்தில் தடுப்பூசிகளை ஏற்றுவதில் முன்னைய கோட்டா அரசு காத்திரமாகப் பங்களித்திருக்கின்றது. அதை இன்னும் முனைப்புடன் தொடர்வதுதான் இப்போது பின்பற்ற வேண்டிய முக்கிய பணி ஆகும்.

# இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உப தலைவராகிறார் சாணக்கியன்?



இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தற்போதைய உப தலைவராக உள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பொன்செல்வராஜா பதவியில் இருந்து விலக போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர் இன்று (சனிக்கிழமை) மட்டக்களப்பில் நடைபெறவுள்ள மத்திய குழு கூட்டத்தின் போது பதவி விலகலை உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் அடுத்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மட்டக்களப்பு உட்பட ஏனைய மாவட்டங்களில் இளைஞர் சமுதாயத்துடன் ஒன்றித்து செயற்படக் கூடிய ஓர் இளம் சிரேஷ்ட உப தலைவர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என கட்சி உறுப்பினர்கள் எதிர்பார்க்கின்றனர் எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆகவே தமிழ் அரசுக் கட்சியின் உப தலைவர் பதவிக்கு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் நியமிக்க வாய்ப்புக்கள் உள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# ‘எம்மிடமிருந்து எம்மவர்களுக்கு’ எனும் தொனிப்பொருளில் தன்னார்வ இளைஞர்களால் சுத்திகரிப்பு பணி முன்னெடுப்பு!

‘எம்மிடமிருந்து எம்மவர்க்கு’ எனும் தொனிப்பொருளில் தன்னார்வ இளைஞர்களால் சுத்திகரிக்கும் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று (சனிக்கிழமை) கிளிநொச்சி பழைய வைத்தியசாலை முன்பாக உள்ள பஸ் தரிப்பிடத்தில் இந்த சுத்திகரிக்கும் பணி முன்னெடுப்பட்டது.

இந்தப் பணியில் இளைஞகள் பலர் தாமாக முன்வந்து பணியில் ஈடுபட்டதோடு கல்வி கற்கும் ஏழை மாணவர்களுக்கு உதவும் வகையில் அங்கு வைக்கப்பட்டிருந்த உண்டியலில் மக்கள் பணம் வழங்கி இளைஞர்களை உட்சாகப்படுத்தினர்.

மேலும் இந்தப் பணத்தை இளைஞர்கள் உரிய முறையில் தேவை உடையோருக்கு வழங்கப்படும் எனவும் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# லண்டன் அபயம் அறக்கட்டளையினரின் நிதியுதவியில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு மருந்துகள்!



லண்டன் அபயம் அறக்கட்டளையின் நிதிப் பங்களிப்பில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு நோயாளர்களின் உயிர் காப்புக்காக ஒரு தொகுதி மருந்துகள் நேற்று (வெள்ளிக்கிழமை) வழங்கிவைக்கப்பட்டன.

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம், சிவபூமி அறக்கட்டளை ஆகியவற்றின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகனின் முயற்சியால் லண்டன் அபயம் அறக்கட்டளையினர் 14 லட்சத்து 78 ஆயிரம் ரூபா பெறுமதியிலான அவசர மருந்துகளை வழங்கியிருந்தனர். அவற்றை ஆறு.திருமுருகன் நேற்று (வெள்ளிக்கிழமை) தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவில் ஒப்படைத்தார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியால் சுகாதாரத்துறை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த இரு தினங்களுக்கு முன்னர்கூட அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் 10 ஆயிரம் புற்றுநோயாளர்கள் மருந்துகள் இன்மையால் உயிருக்காகப் போராடுகின்றார்கள் என்ற நாட்டின் அவல நிலையை வெளிப்படுத்தினார்கள். கலாநிதி ஆறு.திருமுருகன், மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டுவதற்கு முன்னரே வடக்கின் ஒரேயொரு புற்றுநோய் வைத்தியசாலையாகத் திகழும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர்களுக்கு அவர்களின் மருத்துவ தேவை தொடர்பில் ஊடகங்கள் வாயிலாக அறிக்கை விடுத்தும், தனது பெரு முயற்சியால் பல்வேறு அமைப்புகள் தனிநபர்களிடமிருந்தும் ஏராளமான மருந்துகளைப் பெற்றுக்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு மாவட்டத்திலும் தேர்தலில் வீணையில் களம் இறங்குமாம் ஈ.பி.டி.பி.!



எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் வீணை சின்னத்தில் போட்டியிடுவதற்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தீர்மானித்துள்ளது.

ஈ.பி.டி.பி. கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முக்கியஸ்தர்களுக்கும், கட்சியின் செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் இடையில் கொழும்பில் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பி.கட்சியின் ஊடகச் செயலாளரும், கிழக்கு பிராந்திய அமைப்பாளருமான ஸ்ராலினின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில், மட்டக்களப்பு மாவட்ட மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்யும் வகையிலான வேலைத் திட்டத்துடன் செயற்பட முன்வருகின்ற பல்வேறு தரப்புகளையும் இணைத்து கொண்டு எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆப்கனில் கைவரிசை காட்டிய ஐ.எஸ். தரப்பினர் மீது அதிரடி!



## தலிபான்கள் அரசு தாக்குதல்

காபூல்,ஜன.07

ஆப்கானிஸ்தானில் இடம்பெறும் தொடர் தாக்குதல்களுடன் தொடர்புடைய ஐ.எஸ். பயங்கரவாதிகள் அங்கு தலைநகர் காபூல் மற்றும் நிம்ராஸ் மாகாணத்தின் குறிப்பிட்ட பகுதிகளில் பதுங்கி இருக்கின்றனர் எனத் தலீபான்களுக்கு ரகசிய தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து அவர்கள் மீது தாக்குதல் நடத்த அதிரடி முடிவு எடுத்தனர். அதன்படி, தலைநகர் காபூலில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் பதுங்கி இருந்த இடத்தில் தலீபான்கள் அதிரடியாக தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்த தாக்குதலில் வெளிநாட்டினர் உள்ளிட்ட 8 ஐ.எஸ். பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர் என்றும் 7பயங்கரவாதிகள் சுற்றிவளைத்து கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதே போன்று நிம்ராஸ் மாகாணத்தில் நடத்திய அதிரடி நடவடிக்கையில் 2 ஐ.எஸ். பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கைகள், ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பினருக்கு பலத்த பின்னடைவாக அமைந்துள்ளது. ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பினரை குறிவைத்து நடத்திய தாக்குதல்களை உறுதி செய்து தலீபான்கள் அரசின் செய்தி தொடர்பாளர் ஜபிகுல்லா முஜாகித் அறிக்கை,வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் தெரிவிக்கையில், காபூலில் நடத்தப்பட்ட அதிரடி தாக்குதலில், சீனர்களின் லாங்கன் ஓட்டல் தாக்குதலில் தொடர்புடைய ஐ.எஸ். அமைப்பினர் 8 பேர் கொல்லப்பட்டனர். 7 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள்,வெளிநாட்டு ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பினர் ஆப்கானிஸ்தானில் நுழைவதற்கு வழிவிட்டவர்கள் ஆவார்கள். ஆயுதங்கள், கையெறி குண்டுகள், கண்ணி வெடிகள், வெடிகுண்டுகள் பதிக்கப்பட்ட பெல்ட்டுகள், வெடிமருந்துகள் ஆகியவை ாஹ்தாய் சலேஹின் என்ற இடத்தில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளன. என்று அவர் கூறியுள்ளார்.

# இளவயதினருக்கு இலவசமாக ஆணுறை பிரான்ஸ் அரசாங்கம் அதிரடி அறிமுகம்!



வொஷிங்டன், ஜன.07

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான பிரான்ஸில் 18 வயது முதல் 26 வயதுடையவர்களுக்கு இலவசமாக ஆணுறைகள் வழங்கும் திட்டத்தை அந்த நாட்டு அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. பால்வினை நோய்களை பரவுவதை கட்டுப்படுத்தும் நோக்கத்தில் இந்த முடிவை பிரான்ஸ் அரசு மேற்கொண்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக பிரான்ஸ் அரசின் செய்தித் தொடர்பாளர் ஒலிவியர் வேரன் தனது ட்விட் பதிவில் தெரிவிக்கையில், மருத்துவரின் பரிந்துரை சீட்டு இன்றி கருத்தடை சாதனைங்களை இலவசமாக வழங்கும் திட்டத்தை பிரான்ஸ் கொண்டு வந்து இருக்கிறது. கடந்த ஆண்டு முதலே 25 வயதுக்கு உள்பட்ட பெண்களுக்கு இலவசமாககருத்தடைசாதனங்கள்வழங்கப்படுகின்றன. எனினும் புதிய திட்டம் 18 வயதுக்கு உள்பட்ட இளம் பெண்களுக்கும் வழங்குவதை இலக்காக கொண்டுள்ளது என்றார்.

பிரான்ஸ் நாட்டின் அதிபர் இமானுவேல் மேக்ரான் கடந்த டிசம்பர் மாத தொடக்கத்திலேயே இந்த அறிவிப்பை வெளியிட்டார். இந்த நிலையில், புத்தாண்டு முதல் பிரான்ஸில் இந்த திட்டம் அமுலுக்கு வந்துள்ளது. தற்போது 18- 25 வயது வரையிலான இளம் வயதினருக்கு இந்த சுகாதார திட்டம்

அறிமுகப்படுத்தப்பட்டாலும் விரைவில் 18வயதுக்கு கீழ் உள்ளவர்களுக்கும் இது விரிவுபடுத்தப்படும் என்று கூறப்படுகிறது.

பிரான்ஸ் நாட்டில் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் பால்வினை நோய்களின் எண்ணிக்கை 30 சதவிகிதமாக அதிகரித்துள்ளதுடன் அதன் காரணமாகவே இந்த நடவடிக்கையினை அரசு முன்னெடுத்துள்ளதாகவும் சுகாதாரத்துறை அதிகாரிகள் கூறியுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# 11 நாள்கள் இடைவிடாமல் பறந்த பாட்விட் பறவை; 13 ஆயிரம் 560 கிலோ மீற்றரைக் கடந்து சாதனை!

சிட்னி, ஜன.07

வட அமெரிக்காவில் உள்ள அலாஸ்கா பகுதியில் இருந்து புறப்பட்ட 'பார்-டெயில்ட் காட்விட்' இனத்தைச் சேர்ந்த பறவை ஒன்று, 11 நாள்கள் இடைவிடாமல் மொத்தம் 13 ஆயிரத்து 560 கி.மீ.பறந்து ஆஸ்திரேலியாவில் உள்ள டாஸ்மானியா நகரை அடைந்து சாதனை படைத்துள்ளது.

அந்தப் பறவையின் உடலில் பொருத்தப்பட்டிருந்த 5ஜி செயற்கைக் கோள் டேக் மூலம் அதன் முழு பயணத்தையும் ஆய்வாளர்கள் கண்காணித்துள்ளனர். அவ்வாறு கண்காணித்ததில், இந்த பறவை தனது பயணத்தின் போது ஓய்வுக்காகவோ, உணவுக்காகவோ எங்கும் தரை இறங்கவில்லை என்பது தெரியவந்துள்ளது.

இதற்கு முன்பு கடந்த 2007 ஆம் ஆண்டு இதே காட்விட் இனத்தைச் சேர்ந்த பெண் பறவை ஒன்று 11 ஆயிரத்து 500 கி.மீ. இடைவிடாமல் பறந்ததே முந்தைய சாதனையாக இருந்த நிலையில், தற்போது அதே இனத்தைச் சேர்ந்த இன்னொரு பறவை அந்த சாதனையை முறியடித்திருப்பது ஆய்வாளர்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

இவ்வாறு காட்விட் பறவைகள் நாள் கணக்காக இடைவிடாமல் பறக்கும் போது, தங்களது உடலின் திசுக்களை சக்திக்காக பயன்படுத்திக் கொள்ளும் எனவும், 11 நாள்கள் இடைவிடாமல் பறந்த இந்த காட்விட் பறவை தனது உடல் எடையில் பாதிக்கும் மேல் இழந்திருக்கக் கூடும் எனவும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.





# 36 மணி நேரத்துக்கு யுத்தத்தை நிறுத்தும் ரஷ்ய அழைப்பை நிராகரித்தது உக்ரைன்!



கீவ்,ஜன.07

உக்ரைனில் ஆர்த்கோடக்ஸ் கிறிஸ்மஸ் இன்றையதினம் சனிக்கிழமை கொண்டாடப்படுகிறது. இதையொட்டி 36 மணி நேர போர்நிறுத்தத்தை ரஷ்ய அதிபர் புடின் அறிவித்து உள்ளார். உக்ரைன் மக்கள் ஆர்த்தோடக்ஸ் கிறிஸ்மஸை சிறப்பாக கொண்டாடுவதற்கு வசதியாக நேற்று நண்பகல் முதல் இன்று நள்ளிரவு வரை 36 மணி நேரம் போர் நிறுத்தப்படும் என அவர் தெரிவித்தார். இது

தொடர்பாக ரஷ்ய வீரர்களுக்கும் உத்தரவு பிறப்பிக்கபட்டு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

போர் தொடங்கிய பிறகு முதல் முறையாக போர் நிறுத்த அறிவிப்பை ரஷ்யா வெளியிட்டுள்ளது. எனினும், இந்த போர் நிறுத்தத்தை ஏற்க முடியாது என உக்ரைன் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அந்நாட்டு அதிபரின் ஆலோசகர் மைக்கைலோ போடாலியா கூறியதாவது:-

உக்ரைனில் ரஷ்யா பிடித்து உள்ள பகுதிகளை விட்டு முதலில் வெளியேற வேண்டும். அப்போது தான் அது தற்காலிக போர் நிறுத்தமாக இருக்கும். போர் முடிவு பிரகடனம் ரஷ்யாவின் தந்திரமாகும்.

போரை முடிவுக்கு கொண்டு வருவதில் எங்களுக்கு விருப்பம் இல்லை. ரஷ்யாவின் சூழ்ச்சி முயற்சிக்கு பதில் அளிக்க வேண்டியது இல்லை. என்று அவர் கூறியுள்ளார்.

உக்ரைன் மீது ரஷ்ய படைகள் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் தாக்குதலை தொடங்கியதுடன் போர் ஆரம்பித்து கிட்டத்தட்ட ஓர் ஆண்டை நெருங்கி விட்டது. ஆனாலும் இன்னும் சண்டை முடிவுக்கு வரவில்லை. இந்நிலையில், உக்ரைனுக்குப்அமெரிக்கா உள்ளிட்ட நட்பு நாடுகள் ஆயுதம் போன்ற உதவிகள் செய்து வருவதால் உக்ரைன் வீரர்களும் ரஷ்யாவை எதிர்த்து சளைக்காமல் போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# ஒரே பாலினத் திருமணத்துக்கு சட்ட அங்கீகாரம் வழங்குவதா?



## முடிவு செய்ய உச்சநீதிமன்றம் தீர்மானம்

புதுடெல்லி, ஜன.07

இந்தியாவில் ஒரே பாலினத்தைச் சேர்ந்தவர்கள்– அதாவது ஆண் மற்றொரு ஆணையும், பெண் மற்றொரு பெண்ணையும் திருமணம் செய்து கொள்கிறபோது அதற்கு சட்டப்பூர்வ அங்கீகாரம் இல்லை. ஆனால் ஐதராபாத்தைச் சேர்ந்த சுப்ரியோ சக்கரவர்த்தி– அபய் தங், டெல்லியைச் சேர்ந்த பார்த் பெரோஸ் மெஹரோத்ரா– உதய்ராஜ் ஆனந்த் ஆகிய ஆண் ஜோடிகள், தங்கள் திருமணத்துக்கு 1954ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சிறப்பு திருமணச்சட்டத்தின்படி சட்டப்பூர்வ அங்கீகாரம் அளிக்க உத்தரவிடக்கோரி சுப்ரீம் கோர்ட்டில் வழக்குகள் தொடுத்து அவை நிலுவையில் உள்ளன. இதே போன்ற வழக்குகள் பல்வேறு மாநிலங்களில் உள்ள ஐகோர்ட்டுகளிலும் நிலுவையில் இருக்கின்றன.

இந்த நிலையில் சுப்ரீம் கோர்ட்டில் இது தொடர்பான வழக்குகள் தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட், நீதிபதிகள் பி.எஸ்.நரசிம்மா, ஜே.பி. பார்திலாலா ஆகியோர் அடங்கிய அமர்வின் முன் நேற்று விசாரணைக்கு வந்தன.

அப்போது மத்திய அரசின் சார்பில் சொலிசிட்டர் ஜெனரல் துார் மேத்தா ஆஜராகி வாதிட்டார். அவர், தற்போது இந்த விவகாரத்தில் சுப்ரீம் கோர்ட்டு முன் 2 தெரிவுகள் உள்ளன. டெல்லி ஐகோர்ட்டில் இதையொட்டிய ஒரு வழக்கு இறுதிக்கட்ட விசாரணைக்கு வர உள்ளதால் அதன் தீர்ப்புக்காக சுப்ரீம் கோர்ட்டு காத்திருக்கலாம் அல்லது இதையொட்டிய எல்லா வழக்குகளையும் சுப்ரீம் கோர்ட்டுக்கே மாற்றி விடலாம் என தெரிவித்தார்.

இந்த விவகாரத்தில் சுப்ரீம் கோர்ட்டில் தொடுக்கப்பட்டுள்ள பல்வேறு வழக்குகளின் சார்பில் ஆஜரான வக்கீல்கள், எல்லா வழக்குகளையும் சுப்ரீம் கோர்ட்டுக்கே மாற்ற வேண்டும். அப்போது இந்த விவகாரததில் ஒரு அதிகாரப்பூர்வமான உத்தரவு வரும். மத்திய அரசும் இந்த விவகாரத்தில் சுப்ரீம் கோர்ட்டில் தனது பதில் மனுவை தாக்கல் செய்ய முடியும் என குறிப்பிட்டனர்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் அமர்வு, ஒரே பாலின திருமணங்களுக்கு சட்டப்பூர்வ அங்கீகாரம் கேட்டு பல்வேறு மாநிலங்களில் உள்ள ஐகோர்ட்டுகளில் தொடுக்கப்பட்டுள்ள அனைத்து கோர்ட்டுகளையும் சுப்ரீம் கோர்ட்டுக்கு மாற்றி உத்தரவிட்டது. எல்லா வழக்குகளும் ஒரே வழக்காக இணைத்து விசாரிக்கப்படும் எனவும் அறிவித்தது. இந்த வழக்குகள் அனைத்தையும் மார்ச் மாதத்தில் விசாரணை நடத்த பட்டியலிடுமாறும் உத்தரவிட்டனர்.

மேலும், இது தொடர்பான அனைத்து வழக்குகளுக்கும் கூட்டாக மத்திய அரசு அடுத்த மாதம் 15ந் தேதிக்குள் பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும் என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இது தொடர்பாக தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் அமர்வு பிறப்பித்த பிற உத்தரவுகள்:–

▶▶ எந்தவொரு வழக்குதாரரும் நேரில் ஆஜராகி வாதிட முடியாத பட்சத்தில், காணொலிக்காட்சி வசதியைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

▶▶ இந்த விவகாரத்தில் எழுத்துப்பூர்வமான குறிப்புகள், சட்ட விவரங்கள், முன்னுதாரணங்கள் இருந்தால் அவற்றை மத்திய அரசு மற்றும் வழக்குதாரர்கள் என இரு தரப்பும் பகிர்ந்து கொண்டு, சுப்ரீம் கோர்ட்டிலும் தாக்கல் செய்ய வேண்டும்.

▶▶ இது தொடர்பான எந்தவொரு வழக்கும் விடுபடாமல் இருப்பதையும், வழக்குகளின் விவரங்கள் உருவாக்கப்பட வேண்டிய தொகுப்புகளில் இணைக்கப்படுவதையும் மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும்.

– இவ்வாறு சுப்ரீம் கோர்ட்டு கூறி உள்ளது.

# அயோத்தி ராமர் கோவில் அடுத்த ஜனவரியில் திறப்பு



லக்னோ,ஜன.07

அயோத்தியில் கட்டப்பட்டு வரும் ராமர் கோவில் அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திக்குள் தயாராகி விடும் என்று மத்திய உள்துறை மந்திரி அமித்ா நேற்று முன்தினம் கூறியிருந்தார்.

இந்தநிலையில், ராமஜென்மபூமி அறக்கட்டளைபொதுச்செயலாளர் சம்பத் ராய் நேற்று அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு:–

ராமர் கோவில் கட்டுமான பணி உரிய நேரத்தில் முடிவடையும். வருகிற டிசம்பர் மாதம் பணியை முடித்துவிட்டு, அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் கோவிலைத் திறக்க இலக்கு நிர்ணயித்துள்ளோம். அடுத்த ஆண்டு ஜனவரி 14 ஆம் திகதி மகர சங்கராந்தியன்று கோவில் கருவறையில் ராமர் சிலை நிறுவப்படும். அதைத. தொடர்ந்து கோவில் திறக்கப்படும். டிசம்பர் மாதமே கோவில் திறப்பு கொண்டாட்டங்கள் தொடங்கி விடும்.

– இவ்வாறு அவர் கூறினார்.

# திரிவேணி சங்கமத்தில் நேற்று ஐந்து லட்சம் பக்தர்கள் நீராடல்

## கங்கை, யமுனை, சரஸ்வதி கலக்கும் இடத்தில் தொடங்கியது மகா மேளா

பிரயாக்ராஜ்,ஜன.07

உத்தரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில், கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய 3 நதிகள் சங்கமிக்கும் திரிவேணி சங்கமம் உள்ளது. அங்கு புனித நீராடும் ஒரு மாத கால 'மகா மேளா' நேற்று தொடங்கியது.

மார்கழி மாத பௌர்ணமியை முன்னிட்டு, முதல் நாளிலேயே புனித நீராட லட்சக்கணக்கான பக்தர்கள் குவிந்தனர்.

திரிவேணி சங்கமத்தில், புனித நீராட 14 படித்துறைகள் அமைக்கப்பட்டு இருந்தன. அதிகாலை 4 மணி முதல் பக்தர்கள் அனுமதிக்கப்பட்டனர். கடும் குளிரையும், பனிமூட்டத்தையும் பொருட்படுத்தாமல், பக்தர்கள் புனித நீராடத்தொடங்கினர். புனிதநீராடியதுடன், கங்கையில் பால் ஊற்றி சடங்குகள் செய்து வழிபட்டனர். காலை 10 மணிக்குள் 5 லட்சத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் புனித நீராடியதாக அதிகாரிகள் தெரிவித்தனர். மகா மேளாவையொட்டி, 500 படுக்கைகள் கொண்ட தங்குமிடம் அமைக்கப்பட்டுள்ளது. தேசிய பேரிடர் மீட்புப்படை மற்றும் காவல்துறையின் நீச்சல் வீரர்கள் படகுகளில் ரோந்து சுற்றி வந்தனர்.

# கடும் பனிப் பொழிவின் பிடியில் வடமாநிலங்கள்







புதுடெல்லி,ஜன.07

வடமாநிலங்களில் கடந்த சில வாரங்களாக கடும் பனிப்பொழிவு காணப்படுகிறது. பனிப்பொழிவு காரணமாக டெல்லி, இமாச்சலபிரதேச மாநிலங்களில் குளிர் வாட்டி எடுக்கிறது. அதிகாலை நேரங்களில் கிராமங்கள் அனைத்தும் பனி மூடிக்கிடக்கிறது. சாலைகளிலும் பனிமூட்டம் காணப்படுவதால் வாகனங்கள் முகப்பு விளக்குகளை எரிய விட்டபடியே செல்கின்றன. அனைத்து வாகனங்களும் மெதுவாக செல்வதால் முக்கிய சாலைகளில் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது. டெல்லியில் நேற்று 7 டிகிரி செல்சியசாக இருந்த வெப்பநிலை இன்று அதிகாலை 5 டிகிரி செல்சியசாக இருந்தது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டது. பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியே வரமுடியாத நிலை காணப்பட்டது.

இது தொடர்பாக இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கையில் இந்த நிலை வருகிற 11 ஆம் திகதி வரை நீடிக்கும் என்று கூறியுள்ளது.

டெல்லியில் ஏற்பட்டுள்ள பனிமூட்டம் காரணமாக விமானங்களின் வருகை மற்றும் புறப்படுவது தாமதம் ஆவதாக கூறப்பட்டுள்ளது. இது தொடர்பாக விமான நிலைய அதிகாரிகள் கூறும்போது, தற்போது வரை எந்த விமானமும் ரத்து செய்யப்படவில்லை. அதே நேரம் விமானங்களின் புறப்பாடு மற்றும் வருகை குறித்து பயணிகள் விமான நிலையத்தை தொடர்பு கொண்டு விவரங்களை தெரிந்து கொள்ளலாம் என்று அறிவித்து உள்ளது.

# ஜேர்மனின் நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் கல்முனை வைத்தியசாலையின் செயலமர்வில்!







(வி.ரி. சகாதேவராஜா)

ஜேர்மனியின் பிரபல நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி டாக்டர் அருணி வேலழகன் கல்முனை ஆதாரவைத்திய சாலையில் நரம்பியல் உபாதை தொடர்பான செயலமர்வில் வளவாளராக கலந்து கொண்டார்.

கல்முனை ல்ஆதார வைத்தியசாலையில் கடந்த நேற்றும் முந்தினமும் இரண்டு நாள்கள் நரம்பியல் உபாதை நோயாளர் முகாமைத்துவம் சம்பந்தமான செயலமர்வு இடம் பெற்றது.

இந்நிகழ்வு வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா.முரளீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. இதில் வைத்தியசாலையின் வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், மற்றும் ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் போது நரம்பியல் உபாதை ஏற்படும் காரணங்கள், இந்நிலைமைகள் ஏற்படாமல் எவ்வாறு தடுத்துக் கொள்ளலாம், இந்நிலை ஏற்பட்டால் எவ்வாறு பராமரிப்பு வழங்க வேண்டும், என்னென்ன விடயங்களில் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பவற்றை மிகவும் இலகுவான எளிமையான நடைமுறையில் அனைவருக்கும் விளங்கக்கூடிய விதத்தில் நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணர் அருணி வேலழகனினால் விளக்கங்கள் மற்றும் செயன் முறைப்பயிற்சிகள் வழங்கப்பட்டன. இச்செயல் முறை விளக்கம் மிகுந்த பிரயோசனமாகவும் அவசியமாகவும் இருந்ததாக அதில் கலந்து கொண்டோர் கூறினர்.

## திருகோணமலை இந்துக் கல்லூரியின் வரலாறும் வளர்ச்சியும் நூல் வெளியீடு



(இரா.ரஜீந்திரமூர்த்தி)

திருகோணமலை இராமகிருஷ்ண மின் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் 125 ஆவதுஆண்டு விழாவை முன்னிட்டு கல்லூரியின் முன்னாள் அதிபர் சி.தண்டாயுதபாணி எழுதிய 'இந்துக் கல்லூரியின் வரலாறும் வளர்ச்சியும் 1897-2022' எனும் வரலாற்று நூல் வெளியீட்டு விழா கல்லூரியின் அதிபர் செ.பத்மசீலன் தலைமையில் இன்று ஜனவரி 7 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு கல்லூரியின் சம்பந்தர் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஆன்மீக அதிதியாக மட்டக்களப்பு இராமகிஷ்ண மின் முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா முதன்மை விருந்தினராகப் பங்குபற்றினார். ஆசியுரையை வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ இரவிச்சந்திர குருக்கள் வழங்கினார்.

நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி உயர் அதிகாரிகள், பழைய மாணவர்கள் உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## சுவாமி ஜீவனானந்த சமூக சேவைப் பணி வாகரையில்புதனன்றுஅங்குரார்ப்பணம்





(வி.ரி.சகாதேவராஜா)

இராமகிருஷ்ண மின் சுவாமி ஜீவனானந்த சமூக சேவைத் திட்டத்தின் கீழ் வாகரை பிரதேசத்தில் மிகவும் பின்தங்கியுள்ள கொக்குவில், கிருமிச்சோடை மற்றும் குஞ்சன்குளம் ஆகிய பகுதிகளில் பத்து அம்ச திட்டங்களுக்கான அடிப்படை அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த புதனன்று நடைபெற்றது.

வாகரையில் நடைபெற்ற நிகழ்வில் கல்லடி இராமகிருஷ்ண மின் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ், உதவிப் பொது முகாமையாளர் சுவாமி சுரார்சிதானந்தர், வாகரை பிரதேச செயலாளர் மற்றும் இராமகிருஷ்ண மின் தொண்டர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது, சுவாமி ஜீவனானந்தர் சமூக சேவை திட்டத்தின் கீழ், அங்குள்ள மூன்று பள்ளிகளில் அறநெறி பாடசாலைகள் புதிதாக தொடங்கி வைக்கப்பட்டன. மக்களுக்கான குடி தண்ணீர் வசதிக்காக மூன்று அடிக்குழாய்கள் செப்பனிடப்பட்டு வழங்கப்பட்டன. அத்தோடு ஒவ்வொரு கிழமையும் நடைபெறும் வண்ணம் நடமாடும் வைத்திய சேவை ஒன்றும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அறநெறி பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் இந்த நிகழ்வின் போது வழங்கி வைக்கப்பட்டன.

இங்குள்ள உயர்வகுப்பு மற்றும் கல்லூரிக்கு தெரிவாகியுள்ள மாணவர்களுக்கு உயர் கல்விக்கான வசதிகள் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த திட்டத்தின் கீழ் இங்குள்ள மக்களுக்கான சுயசார்பு வேலைவாய்ப்புக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பட்டிப்பளையில் இடம்பெற்ற இலக்கியக் கலந்துரையாடல்



(பழுவூரான்)

பட்டிப்பளைப் பிரதேச கலை, இலக்கிய மன்றம் மற்றும் 'கட்டியம் ஆற்றுகைக் குழு' உறுப்பினர்களுடன் இந்தியாவில் இருந்து வருகை தந்த காந்தி கிராமிய பல்கலைக் கழக முன்னாள் பேராசிரியர் சுந்தர்காளி மற்றும் பங்களாதேஷ் ஜகனிர்நகர் பல்கலைக்கழக பொருளியல் பேராசிரியர் அனு மொகமட் ஆகியோரின் கலந்துரையாடல் நேற்று முன்தினம் உற்க்டா பண்ணையில் நடைபெற்றது.

இதில் இலக்கியக் கலந்துரையாடலுக்கு மெலதிகமாக இலங்கையின் சமகால பொருளாதார நிலைமை, உள்ளூர் பொருளாதார முனைவுகளை எவ்வாறு மேலும் கொண்டு செல்வது என்பன தொடர்பாகவும் பிரதேச தொழில் முனைவோருடன் கலந்துரையாடப்பட்டது.

இதில் கலாநிதி சி. ஜெயசங்கர், கலாநிதி விமல்ராஜ், கலாநிதி விவேகானந்தராசா, விரிவுரையாளர் கௌரீஸ்வரன், இரு பேராசிரியர்களின் குடும்ப உறுப்பினர்கள், மாவட்ட கலாசார இணைப்பாளர் மலர்செல்வன், கலாசார உத்தியோகஸ்தர் ரூபேசன் போன்றோருடன் பிரதேச கலைஞர்கள், தொழில் முனைவோர், பல்கலைகழக மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## காரைதீவு பிரதேச வர்த்தகர்கள் சங்கம்



(வி.ரி. சகாதேவராஜா)

முதன்முறையாக வர்த்தகர் சங்கம் நேற்று வெள்ளிக்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் முன்னிலையில் இந்த உருவாக்கக்குழு கூட்டம் கலாச்சார மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது காரைதீவில் உள்ள வர்த்தகர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

தலைவராக முன்னாள் உதவிதவிசாளர் க.தட்சணாமூர்த்தி தெரிவு செய்யப்பட்டார். ஏனைய நிர்வாக சபை உறுப்பினகளும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

21 சிரேஷ்ட உறுப்பினர்களையும் 298 அங்கத்தவர்களையும் கொண்ட இச்சங்கம் காரைதீவு 1-12 பிரிவுகளை உள்ளடக்கிய வர்த்தக சங்கம் என்பது குறிப்பிடத்தக்கது.



# குமார் நடேசனுக்கு சாதனைத் தமிழன் விருது வழங்கி மகத்தான கௌரவிப்பு

சென்னையில் நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற ஒன்பதாவது உலக தமிழ் வம்சாவளி மாநாட்டில் ஊடகத்துறையில் சாதனை புரிந்தமைக்காக வீரகேசரி நாளிதழின் முகாமைத்துவப்பணிப்பாளரான குமார் நடேசனுக்கு 'சாதனை தமிழன்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

அவருக்கு இந்த விருதை தமிழ்நாடு சிறு, குறு தொழில் துறை மற்றும் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய துறையின் அமைச்சரான தா. மோ. அன்பரசன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் இணைந்து வழங்கினர்.

சென்னை வர்த்தக மையத்தில் உலகத் தமிழ் வர்த்தக சபை சார்பாக ஒன்பதாம் ஆண்டு உலக தமிழ் வம்சாவளி மாநாடு நடைபெற்றது.

இந்த மாநாட்டை உலக தமிழ் வர்த்தக சபைதலைவர் செல்வகுமார் ஒருங்கிணைந்திருந்தார்.

இந்த மாநாட்டில் தமிழக அரசு மற்றும் இந்திய அரசின் அனுசரணையுடன் இலங்கை, இந்தியா, மலேசியா, கனடா உள்ளிட்ட அறுபதுக்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து 1500 இற்கும் மேற்பட்ட தொழில்முனைவோர்கள், முந்நூறுக்கும் மேற்பட்ட வர்த்தக சங்கங்கள் மற்றும் பன்னாட்டு வர்த்தக ஆணையங்கள் சார்பில் அதன் பிரதிநிதிகள் பங்குபற்றினர்.

இந்த விழாவில் இலங்கையின் வடக்கு மாகாண முன்னாள் முதல்வரும், தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான சி. விக்னேஷ்வரன், இலங்கையின் முன்னாள் மாகாண கல்வித்துறை அமைச்சர் ராதாகிருஷ்ணன், மலேசிய நாட்டின் அமைச்சர் சிரஸ்வதி கந்தசாமி, வி.ஐ.டி. பல்கலைகழகத்தின் வேந்தர் விஸ்வநாதன் உள்ளிட்ட சர்வதேச அளவில் பிரபலமான அரசியல்தலைவர்கள்மற்றும்கல்வியாளர்கள் சிறப்பு அதிதிகளாக பங்குபற்றினர்.

ஜனவரி 6 மற்றும் 7 ஆகிய திகதியில் நடைபெற்ற இந்த மாநாட்டின் ஒரு பகுதியாக 'சாதனை தமிழன்' விருது மற்றும் 'நல் ஆசான்' விருது வழங்கும் விழழ நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஊடகத்துறையில் ஜனநாயகத்தைப் போற்றி பாதுகாக்கும் பாரம்பரிய ஊடகமான வீரகேசரியின் சேவையைப் பாராட்டி, அதன் முகாமைத்துவப் பணிப்பாளரான குமார் நடேசன் சாதனை தமிழன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இவரைத் தொடர்ந்து சிறைச்சாலையில் வாடும் இளம்பிராயத்து குற்றவாளிகளைக் கண்டெடுத்து, அவர்களுக்கு கல்வியறிவு ஊட்டும் பணியில் தம்மை அர்ப்பணித்திருக்கும் கருஞ்சட்டை ராஜேந்திரன் அவர்களுக்கு 'நல் ஆசான்' விருதும் வழங்கப்பட்டது.

இந்த மாநாட்டில் சென்னையிலுள்ள கொரியா நாட்டின் உயர் துணை ஸ்தானிகர் உள்ளிட்ட பல இராஜங்க ரீதியாக பணியாற்றும் உயரதிகாரிகளும் பங்குபற்றி சிறப்பித்தனர். இந்த விழாவில் விருது வழங்கும்நிகழ்வுடன், இளங்கலைஞர்களின் கலாசாரநாட்டியநிகழ்வுகளும்நடைபெற்றன.

மாநாட்டின் வளாகத்தில் இருபதிற்கும் மேற்பட்ட தனியார் மற்றும் அரசாங்க துறையின் அரங்குகள் இடம்பெற்றிருத்தது- இதில் பணியாற்றும் பிரதிநிதிகள், உலகத்தின் பல பகுதிகளிலிருந்தும் வருகைத்தந்த தமிழர்களுக்கு, முதலீடு குறித்த விளக்கங்களையும், தமிழக அரசு மற்றும் இந்திய அரசுவழங்கும்சலுகைகள் தொடர்பாகவும் விரிவாக விளக்கினர்.

# உலக உணவுத் திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தில் உலர் உணவு விநியோகம்!





மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட போசாக்கு குறைவான மற்றும் வறிய குடும்பங்களுக்கு உலக உணவுத் திட்டம் மற்றும் வேல்ட் வின் இணைந்து முன்னெடுக்கும் உலர் உணவு பொருள்கள் வழங்கும் ஆரம்ப நிகழ்வு வியாழக்கிழமை மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெற்றது.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் கலந்துகொண்டார்.

மேலும் மாந்தை மேற்கு மற்றும் மடு பிரதேச செயலாளர்கள், உலக உணவு திட்டத்தின் பிரதிநிதியும் கலந்துகொண்டார்.

மன்னார் மாவட்டத்தில் ஐந்து பிரதேசச் செயலாளர் பிரிவுகளிலும் 11 ஆயிரத்து 121 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில், முதல் கட்டமாக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஆண்டாங்குளம் கிராம அலுவலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 68 பயணாளிகளுக்கு குறித்த உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. பயனாளி ஒருவருக்கு 50 கிலோ அரிசி, 5 லீற்றர் தேங்காய் எண்ணெய், 20 கிலோ பருப்பு ஆகியவை வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சினோபார்ம் தடுப்பூசியை நான்காவது தடுப்பூசியாக பயன்படுத்த தீர்மானம்!

சினோபார்ம் தடுப்பூசியை நான்காவது தடுப்பூசியாக பயன்படுத்த இலங்கை சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

நாட்டில் பைசர் தடுப்பூசிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள காரணத்தாலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று மீண்டும் பரவக்கூடிய அச்சுறுத்தல் அதிகரித்துள்ளதாக எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில் இதுவரை கொரோனா தடுப்பூசியின் பூஸ்டர் டோஸ்களை பெறாதவர்கள் சினோபார்ம் தடுப்பூசிகளைப் பெறுமாறு சுகாதார அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

தற்போது இலங்கையில் 10 லட்சத்து 80 ஆயிரம் சினோபார்ம் தடுப்பூசி டோஸ்கள் சுகாதார அமைச்சில் இருப்பதாக இலங்கை தொற்று நோயியல் பிரிவின் புதிய தலைமை தொற்று நோயியல் நிபுணரான வைத்தியர் சமித கினிகே தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களில் 60 லட்சம் பேர் இதுவரை பூஸ்டர் தடுப்பூசிகளைப் பெறவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தையல் பயிற்சி மாணவர்களின் கண்காட்சி தம்பலகாமத்தில்!







(ஹஸ்பர்)

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் கிராமிய அபிவிருத்தி திணைக்களம் ஊடாக இடம் பெற்று வரும் தையல் பயிற்சி பாடநெறியை பூர்த்தி செய்த மாணவர்களின் கண்காட்சி நிகழ்வு கடந்த செவ்வாயன்று இடம் பெற்றது.

இந்தக் கண்காட்சியின் அங்குரார்ப்பண வைபவம் புதுக்குடியிருப்பு கிராம சேவகர் கட்டடத்தில் பிரதேச செயலாளர் ஜெ.ஶ்ரீபதி தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதில் 18 வகையான தையல் உற்பத்தி பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டன. 2022 ஆம் ஆண்டில் தையல் பயிற்சி நெறியை நிறைவு செய்த மாணவர்களின் சுயதொழில் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் இவ்வாறான கண்காட்சி இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இக் கண்காட்சியில் சிறுவர் ஆடை உற்பத்திகள், கட்டில் விரிப்பனைகள், தலையணை உறை,சிறு பைகள்,கால் துடைப்பான் எனப் பல உற்பத்திப் பொருள்கள் இதன் போது காட்சிப்படுத்தப்பட்டன.

இதன் போது உரையாற்றிய தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஶ்ரீபதி இவ்வாறான உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதன் ஊடாக நாம் அதனை வெளி உலகுக்கு கொண்டுசென்று எங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, சிறந்ததொரு உற்பத்தியாளர்களாக மாற வேண்டும் என்றார். இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், கிராமிய அபிவிருத்தித் திணைக்கள மாவட்ட உத்தியோகத்தர் எஸ்.பத்மராஜா, சமூக சேவை உத்தியோகத்தர் ப.சுதன் , கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஆர்.பர்ஹானா,சிரேஷ்ட தையல் போதனாசிரியர் ஆர்.சர்வேஸ்வரி, ஓய்வு பெற்ற சிரேஷ்ட தையல் போதனாசிரியர் எம்.கே.எல்.லீமா ரோசலின் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## பிரத்தியேக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

1968ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க திருத்தப்பட்ட பகிரங்க பரீட்சைகள் சட்டத்தின் 22ஆம் பிரிவுக்கமைய, ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைகள் தொடர்பான பிரத்தியேக வகுப்புகள், கருத்தரங்குகள், செயலமர்வுகளுக்கு ஜனவரி 17 ஆம் திகதி நள்ளிரவு முதல் பரீட்சைகள் நிறைவடையும்வரை தடைவிதிக்கப்படுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தடை விதிக்கப்படும் குறித்த காலப்பகுதியில்,

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புகளை நடத்துதல், ஒழுங்குபடுத்தல்

பாடங்கள் தொடர்பான விரிவுரைகள், கருத்தரங்குகள், செயலமர்வுகளை நடத்துதல்

குறித்த பரீட்சைகள் தொடர்பான மாதிரி வினாப்பத்திரங்களை அச்சிடுதல், விநியோகித்தல்

குறித்த பரீட்சைகள் தொடர்பான அனுமான வினாக்களை வழங்குவதாகவோ, அது போன்ற மாதிரி வினாக்களை வழங்குவதாகவோ சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள், பதாகைகள் போன்றவற்றை நேரடியாக அல்லது இலத்திரனியல் ஊடகங்கள், அச்சு ஊடகங்கள் ஊடாக வெளியிடுதல், அவ்வாறானவற்றை வைத்திருத்தல் ஆகியன குற்றங்களாகும்.

– குறித்த உத்தரவை மீறும் நபர்கள் அல்லது நிறுவனங்கள் இந்தச் சட்டத்தின் கீழ் குற்றவாளிகளாவர்.

எவரேனுமொருவர் அல்லது நிறுவனம், குறித்த உத்தரவுகளை ஏதேனுமொரு வகையில் மீறுதல் அல்லது செயற்படும் நிலையில், அது பற்றி அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கோ, பொலிஸ் தலைமையகத்துக்கோ, பரீட்சைகள் திணைக்களத்துக்கோ அறிவிக்குமாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எம்.எல்.டி. தர்மசேன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

– பொலிஸ் தலைமையகம் – 011 2421111
– பொலிஸ் அவசர தொலைபேசி – 119
– பரீட்சைகள் திணைக்கள உடனடித் தொலைபேசி – 1911
– பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அலுவலகம் – 011 2785211/ 011 2785212
–பாடசாலை பரீட்சைகள் ஒழுங்குபடுத்தல் மற்றும் பெறுபேறுகள் பிரிவு– 011 2784208/ 011 2784537







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.01.2023 இல் வெளியிடப்பெற்றது.